

மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்டங்களின் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தை நேற்று மாலை, சென்னை – குறிஞ்சி இல்லத்தில் நடத்திய கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் தலைமைக் கழகம் இளைஞர் அணிக்கு வழங்கிய பணிகளான சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு கலைஞர் நூலகம் அமைத்தல், ‘என் உயிரினும் மேலான’ பேச்சுப்போட்டி ஆகியவற்றில் மதுரை வடக்கு, தெற்கு மாவட்டங்களில் உள்ள முன்னேற்றங்கள், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் கழகத்தினரோடு ஆற்றிய பங்களிப்புகள், இளைஞரணி மாநில மாநாடு நீட் விலக்கு நம் இலக்கு போராட்டம் ஆகியவற்றில் செயலாற்றிய விதம் குறித்து கேட்டறிந்தார். மேலும் ”இல்லம் தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை விவரங்களை ஆய்வுசெய்ததுடன், 2026 தேர்தலை மனதிலேந்தி உழைத்திடுமாறு, மதுரை வடக்கு & தெற்கு மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் காண்பித்த மினிட் புத்தகம் புகைப்பட தொகுப்புகள் பத்திரிகை செய்திகள் ஆகியவற்றைப் பார்வையிட்டு உற்சாகப்படுத்தினார்.



தேனி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று குறிஞ்சி இல்லத்தில் நடத்தினார். இது குறித்து வலைதளப் பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ”நம் தேனி வடக்கு மற்றும் தெற்கு மாவட்டத்தில் இளைஞரணியினர் மேற்கொண்டு வரும் பல்வேறு பணிகளை இந்த ஆய்வின் போது தனித்தனியாகக் கேட்டறிந்தோம். குறிப்பாக, கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு இளைஞரணி சார்பில் நடத்தப்படவுள்ள ‘என் உயிரினும் மேலான’ பேச்சுப் போட்டிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளைப் பற்றிக் கேட்டோம். கழகத்துக்கு வலிமை சேர்த்திடும் வகையில், அதிக எண்ணிக்கையிலான இளைஞர்களை கழக இளைஞரணியின் உறுப்பினராக்குவதற்காகத் தொடங்கப்பட்ட ‘இல்லந்தோறும் இளைஞரணி’யின் பணிகள் உள்ளிட்டவை குறித்து விரிவாகக் கேட்டறிந்தோம். இளைஞரணி மாநில மாநாட்டுப்பணி – நீட் விலக்கு , நம் இலக்கு போராட்டங்கள் நாடாளுமன்றத் தேர்தல் பணி – விக்கிரவாண்டி இடைத்தேர்தல் பணி 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான பணிகளைத் தொடங்குவது போன்றவை குறித்து நம்மிடம் விரிவாக எடுத்துரைத்தனர். மினிட் புத்தகம் – பத்திரிகைச் செய்திகள் – புகைப்படத் தொகுப்புகள் போன்றவற்றை தேனி வடக்கு, தெற்கு மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நம்மிடம் காண்பித்தனர். அவர்களுடைய பணிகளை வாழ்த்தி மகிழ்ந்தோம் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.



கழகத்தின் முன்கள வீரர்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தி.மு.க. இளைஞர் அணியின் பணிகளை மேலும் வலிமைப்படுத்தும் விதமாக தொடர் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வரும் இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அந்த வகையில், இராமநாதபுரம் மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை நேற்று நேரில் ஆய்வு செய்தார். இளைஞரணிப் பொறுப்புக்கு வந்து கிட்டத்தட்ட ஓராண்டு நிறைவுற்றுள்ள நிலையில், கழகத்துக்குச் செய்துள்ள பங்களிப்புகள் குறித்து அமைப்பாளர் துணை அமைப்பாளர்களிடம் கேட்டறிந்தோம். இல்லந்தோறும் இளைஞரணி முன்னெடுப்பின் தற்போதை நிலவரம் – சேலம் இளைஞரணி மாநில மாநாட்டுக்காக இளைஞர்களை ஒருங்கிணைத்த விதம் நாடாளுமன்றத் தேர்தல் & விக்கிரவாண்டி இடைத்தேர்தல் களத்தில் ஆற்றிய பணிகள் – சமூக வலைத்தளம் மற்றும் களத்தில் கழகத்திற்கு எதிரான அவதூறுகளை முறியடிப்பது, கழக அரசின் சாதனைகளை கொண்டு சேர்ப்பது – கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு கலைஞர் நூலகம் திறக்கும் பணிகள் – கலைஞர் 100 பேச்சுப் போட்டிக்கான ஏற்பாடுகள் உள்ளிட்டவை குறித்து, மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் நம்மிடம் விரிவாக எடுத்துரைத்தனர். அவர்களின் பணிகளுக்கு சான்றாகக் கொண்டு வந்திருந்த மினிட் புத்தகம் – செய்திக்குறிப்பு – புகைப்படங்களைப் பார்வையிட்டு, இராமநாதபுரம் இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களின் பணிகள் சிறக்க வாழ்த்தினோம் என்று தமது வலைதளப் பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



இளைஞர் அணியின் தென்காசி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தை குறிஞ்சி இல்லத்தில் நேற்று மாலை நடத்திய இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்,தென்காசி வடக்கு & தெற்கில் இளைஞரணி சார்பில் நடைபெற்று வரும் பணிகள் – புதிதாகத் தொடங்கப்படவுள்ள முன்னெடுப்புகள் குறித்து இந்த ஆய்வின் போது, பல்வேறு கேள்விகளை எழுப்பினார். ”இளைஞரணியில் அடுத்த தலைமுறை இளைஞர்களை இணைப்பதற்காக, தொடங்கப்பட்டுள்ள ‘இல்லந்தோறும் இளைஞரணி’ மூலம் சேர்க்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்களின் விவரங்களைக் கேட்டறிந்தார். இளைஞர் அணி மாநில மாநாடு & அதற்கான, முன்னேற்பாட்டு நிகழ்வாக செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்தியது – சமூக வலைதளப் பங்களிப்பு – களத்தில் உழைக்கின்ற விதம் – 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கான தயார்நிலைப் பணிகள் என பல்வேறு அம்சங்களை இந்த ஆய்வின் போது அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நம்மிடம் எடுத்துக் கூறினர். கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு நடத்தப்படவுள்ள ‘என் உயிரினும் மேலான’ பேச்சுப்போட்டியை மாவட்ட – மண்டல – மாநில அளவில் சிறப்பாக நடத்திட ஆலோசனைகளை வழங்கி வாழ்த்தினோம் என்று இந்த ஆலோசனைக் கூட்டம் குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின் பேரில், இளைஞரணி மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் , துணை அமைப்பாளர்கள் பணிகளைத் தொடர்ந்து ஆய்வு செய்து வரும் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அந்த வரிசையில் நேற்றைய தினம், தஞ்சை வடக்கு மாவட்டம் மற்றும் கும்பகோணம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் , துணை அமைப்பாளர்களின் ஓராண்டுப் பணிகளை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, கழகத்தலைமை இளைஞரணிக்கு வழங்கியுள்ள பணிகள், இளைஞரணி சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களிடம் விரிவாக கேட்டறிந்தோம். இல்லந்தோறும் இளைஞரணி – கலைஞர் 100 பேச்சுப் போட்டிக்கான ஏற்பாடுகள் தொடர்பாக நடைபெற்று வரும் பணிகளை விளக்கியதோடு, நீட் ஒழிப்புப் போராட்டங்கள், கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு நூலகம் திறந்தது, இளைஞரணி மாநாட்டுப் பணிகள் என இதுவரை மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளை விளக்கினர். கழக இளைஞரணி இன்னும் பல உயரங்களைத் தொடுகிற வகையில் பணியாற்றிட அவர்களை வாழ்த்தினோம் என்று, இது தொடர்பாக வலைதளப்பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## கட்டுமானத் துறையை புறக்கணித்த நிதி நிலை அறிக்கை!

# ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று நாடு தழுவிய ஆர்ப்பாட்டம்!

## சென்னை ஆர்ப்பாட்டத்தை பொன்குமார் தொடங்கி வைத்து உரை!

*சென்னை, ஆக.6-*

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் கட்டுமானத் துறையை புறக்கணித்த, தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் வஞ்சித்த ஒன்றிய அரசைக் கண்டித்து கட்டுமானம் மற்றும் மனைத் தொழில் கூட்டமைப்பின் சார்பில் நாடு தழுவிய அளவில் இன்று (06.08.2024) ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. சென்னையில் ஏழும்பூர், இராஜ ரத்தினம் மைதானம் அருகில் காலை 11.00 மணியளவில் கூட்டமைப்பின் பொருளாளர் பொறி.எஸ். ஜெகதீசன் தலைமையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தை தலைவர் பொன்குமார் தொடங்கி வைத்து கண்டன உரையாற்றுகிறார். விவசாயிகள்-தொழிலாளர்கள் கட்சி பொதுச் செயலாளர் என்.சுந்தரராஜ், தலைமை நிலைய செயலாளர் து.ரஜினிராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கட்டுமானம் மற்றும் மனைத் தொழில் கூட்டமைப்பின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 28.07.2024 அன்று சென்னை பழைய பல்லாவரத்தில் நடைபெற்றது. தலைவர் பொன்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இச்செயற்குழு கூட்டத்தில் பொருளாளர் பொறி.எஸ்.ஜெகதீசன் அவர்கள் முன்னிலையில், செயலாளர் எஸ்.யுவராஜ் அவர்கள் வரவேற்று பேசினார். இந்தக் கூட்டத்தில் பல்லாவரம் சட்டப்பேரவை உறுப்பினர் இ.கருணாநிதி, நாங்குனேரி சட்டப்பேரவை உறுப்பினர் ருபிமனோகரன் ஆகியோர் கலந்து கலந்து கொண்டு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினர். இந்தக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன.

**எளிமையாகவும், விரைவாகவும் கட்டட அனுமதி– முதல்வருக்கு பாராட்டு!**

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், பெருவாரியான மக்களின் வேலை வாய்ப்பிற்கும் துணை புரியும் கட்டுமானம் மற்றும் மனைத் தொழிலுக்கு தடையாக உள்ளவற்றை நீக்கி, தொழிலை எளிமைப்படுத்தி, வளர்த்தெடுத்திட வேண்டுமென்பதற்காக கட்டுமானம் மற்றும் மனைத் தொழில் கூட்டமைப்பு வைத்த கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டு பல்வேறு அறிவிப்புகளையும், அரசாணைகளையும் வெளியிட்டு வருகிறது. குறிப்பாக 2023 மார்ச் மாதம் கோவையில் நடைபெற்ற கூட்டமைப்பின் கோவை மாவட்ட மாநாட்டில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் எஸ்.முத்துசாமி அவர்களிடம் கூட்டமைப்பின் சார்பில் வைத்த கோரிக்கைகளில் பெரும்பாலான கோரிக்கைகள் ஏற்கப்பட்டு அறிவிப்புகளும் அரசாணைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து தற்போது 2500 சதுர ஆடி மனையில் 3500 சதுர ஆடிக்குள் வீடு கட்டுபவர்களுக்கு எளிமையாகவும் விரைந்தும், இணையவழி மூலம் கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி வழங்கக்கூடிய ஒரு சிறப்பு மிக்க திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தை 22.07.2024 அன்று தொடங்கி வைத்துள்ள தமிழ்நாடு முதலமைச்சருக்கு இந்தச் செயற்குழு கூட்டம் தனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது. இது இந்தத் தொழிலை வளர்த்தெடுக்க உதவிடும் என இச்செயற்குழு பதிவு செய்கிறது.

**அரசுக்கு நன்றியவிப்பு– செங்கை மாநாடு**

இப்படி கட்டுமானத் தொழிலுக்கு முட்டுக்கட்டையாக உள்ளவற்றை நீக்கி, எளிமைப்படுத்தி, கட்டுமானத் தொழில் வளர்ச்சி அடைவதற்கு பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்திட இவ்வாண்டு இறுதியில் செங்கல்பட்டு மாவட்டத்தின் சார்பில் நன்றியறிப்பு மாநாடு நடத்துவதெனதீர்மானிக்கப்பட்டது. இந்த மாநாட்டை மாநிலத் துணைத் தலைவர் பொறி. என்.சிதம்பரேஷ், இணைச் செயலாளர்கள் ஆர்.பானுகோபன், பொறி.எ.வெற்றிச் செல்வன் ஆகியோர் முன்னின்று நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

**தமிழ்நாட்டை பழிவாங்கிய நிதிநிலை அறிக்கை!**

ஆண்மையில் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய அரசின் 2024-2025 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற வார்த்தையே இடம்பெறாமல், தமிழ்நாட்டுக்கு எந்த வித நிதியும் ஒதுக்கீடு செய்யாமல் தமிழ்நாட்டிற்கு மிகப் பெரிய துரோகத்தை ஒன்றிய அரசு செய்துள்ளது. குறிப்பாக பெருவெள்ளம் மழை போன்ற பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டிற்கு ரூபாய் 37.000 கோடி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தொடர்ந்து கேட்டு வந்துள்ளது. அதற்கு நிதி ஒதுக்குவதற்கு ஒன்றிய அரசுக்கு மனமில்லை. ஆனால் வருமுன் காப்பதற்காக பேரிடர் நிவாரண நிதியாக ரூ,11,000 கோடியை பீகார் மாநிலத்திற்கு ஒதுக்கியிருப்பது தமிழ்நாட்டை பழிவாங்கும் செயலாகும் என இக்கூட்டம் பதிவு செய்து கண்டிக்கிறது.

**கட்டுமானத்துறைக்கு எந்த சலுகையும் இல்லாத நிதிநிலை அறிக்கை**

நாட்டின் கட்டமைப்புப் பணிகளை மேற்கொண்டு, பொருளாதார வளர்ச்சிக்கும், பெருவாரியான மக்களின் வேலை வாய்ப்பிற்கும் துணை புரியும் கட்டுமானம் மற்றும் மனைத் தொழிலை ஊக்கப்படுத்துவதற்கு எந்தவித அறிவிப்பையும் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் வெளியிடாதது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது. ஜி.ஏஸ்.டி.யை குறைத்திடவோ, கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தைகட்டுப்படுத்திடவோ எந்தவித அறிவிப்பையும் நிதிநிலை அறிக்கையில் வெளியிடாதது இந்தத் துறையை மேலும் நலிவடைய செய்யும் என இந்தக் கூட்டம் தனது கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

**கட்டுமானத் துறைகான ஜி.எஸ்.டி யை குறைந்திடுக!**

தங்கம், வைரம் மற்றும் பிளாட்டினம் போன்றவற்றுக்கு இறக்குமதி வரியைக் குறைத்து நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு செய்துள்ள ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள், கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானத் துறைக்கு உள்ள அதிகபட்சமான ஜிஏஸ்டியைக் குறைத்து, இந்தத் தொழிலை ஊக்கப்படுத்தி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிட முன்வர வேண்டுமென இக்கூட்டம் ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறது.

**ஆகஸ்ட் 6இல் ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்த்திட ஆர்ப்பாட்டம்**

ஜி.ஏஸ்.டியை குறைத்தல், கட்டுமானப் பொருட்களின் விலை ஐற்றத்தை கட்டுப்படுத்துதல் போன்ற எந்த அறிவிப்புகளையும் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் வெளியிடாமையைக் கண்டித்தும்; சிமெண்ட் உள்ளிட்ட கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானத் துறையின் மீது விதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச ஜி.எஸ்.டியை 5 சதவீதமாக குறைத்திட கோரியும், கட்டுமானப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்திட நிரந்தரமாக செயல்படக்கூடிய விலை நிர்ணயக் குழுவை அமைத்திட கோரியும், கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்திற்கு காரணமாக அமைந்துள்ள சுங்கச்சாவடிகளை அகற்றக் கோரியும் ஆகஸ்ட் 6 ஆம் தேதி அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்த்திட ஆர்ப்பாட்டம் நடத்துவதன தீர்மானிக்கப்பட்டது.

**பொறியாளர்கள் கவுன்சில் விரைத்து அமைத்திடுக!**

கட்டுமானத் துறையில் ஈடுபடக்கூடிய சிவில் இன்ஜினியர்களை வரைமுறைப்படுத்திடவும், தங்களுடைய தொழில்நுட்ப அறிவை உலக அளவிற்கு ஏற்ப வளர்த்தெடுக்கவும், பொது மக்களுக்கு தரமான பொறியாளர்கள் கிடைத்திட ஏற்பாடு செய்திடவும், கட்டுமானப் பொறியாளர் கவுன்சில் அமைத்திட வேண்டும் என்ற கோரிக்கையை அரசு கொள்கைளவில் ஏற்றுக் கொண்டதற்கு இந்தக் கூட்டம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

குஜராத்தைத் தொடர்ந்து அண்மையில் கர்நாடக மாநிலத்திலும் சிவில் இன்ஜினியர்களுக்கான கவுன்சில் அமைப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனைச் சுட்டிக்காட்டி, விரைவில் தமிழ்நாட்டிலும் பொறியாளர் கவுன்சில் ஒன்றை உருவாக்கிக் கொடுத்திட வேண்டுமென மாநில அரசை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## முத்தமிழறிஞர் கலைஞர் 6வது நினைவு நாள்

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி!

## தொழிலாளர் அணித் தோழர்களுக்கு - தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் வேண்டுகோள்!

*சென்னை, ஆக.6*

தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தகைமைசால் தலைவராக - எழுத்தாளராக - கவிஞராக - சொற்பொழிவாளராக திரைக்கதை வசனகர்த்தாவாக - இலக்கியவாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக - தலைசிறந்த நிர்வாகியாக - தமிழ்நாட்டில் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழ்நாட்டின் வரலாற்றில் தமக்கென்று பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6வது நினைவு நாளான ஆகஸ்ட் 7, புதன்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திட தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள “அமைதிப் பேரணி” யில் தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள், அனைத்து மாவட்டத்திலுள்ள தொழிலாளர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்களும் மற்றும் தொழிலாளத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்திட வாரீர் என அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.